அசல் வழக்கு எண்.13/2020 வா.சா.1 சரோஜா த/பெ கோவிந்தசாமி

**<u>19.04.2023 2ம் பிரதிவாதித்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 2 முதல் 4 வாதிகள் என் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையானவர்கள் என் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் தந்தை பெயர் பூச்சி என்கிற கோவிந்தராஜ் என்றால் சரிதான். தற்போது என் அப்பா, அம்மா இருவரும் இறந்து விட்டார்கள்.

2. வழக்குச்சொத்துக்கள் நீப்பலாம்பட்டு கிராமத்தில் உள்ள நிலம் மற்றும் நஞ்சுகொண்டாபுரம் கிராமத்தில் உள்ள வீடு ஆகியவை ஆகும். வழக்குச்சொத்துக்கள் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவாவில் சொல்லி உள்ளவாறு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நானும் மற்ற வாதிகளும் பிரதிவாதிகளிடம் நேரடியாக சென்று பாகம் கேட்டோம் என்றும் அதற்கு அவர்கள் ஒத்துக் கொள்ளாததால் வழக்குதாக்கல் செய்தோம் என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல.

3. வழக்குச்சொத்துக்களை பிரதிவாதிகள் 3ம் நபருக்கு கிரயம் செய்ய முயற்சி செய்வதாக சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கில் நானும், மற்ற வாதிகளும் கோரியுள்ளவாறு தீர்ப்பாவதற்கு 2ம் பிரதிவாதித்தரப்பில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.